DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, VELLORE DISTRICT

| | |
|---|---|
| Name: ஜெகன் | Father's Name: சுப்பிரமணி |
| Village: அண்ணா நகர் | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age: 58 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 20.02.2024

**O.S.No.117/2019** வா.சா.**3**

**1,2,3,5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–**

1. நான் விஜயகுமார் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து அரசுக்கு சொந்தமான நிலம் என சொல்லியுள்ள நிலையில் என்ன வகை நிலம் என்று தெரியுமா என்றால் நகராட்சிக்கு சொந்தமான நிலம் ஆகும். வாதி விஜயகுமார் யாருக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் நகராட்சி மற்றும் நெடுஞ்சாலை துறைக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்.

2. எனது முதல் விசாரணையில் வழக்கு சொத்து எந்த துறைக்கு சொந்தமானது என்று சொல்லியிருக்கிறேனா என்றால் நகராட்சிக்கு சொந்தமானது என்று தான் சொல்லியிருக்கிறேன். வழக்கு சொத்து தனி நபருக்கு சொந்தமான சொத்து இல்லை என்றால் சரியல்ல, விஜயகுமார் தான் 30 ஆண்டுகளாக அனுபவித்து வருவதால் அவருக்கு தான் சொந்தமானது. 30 ஆண்டுகளாக விஜயகுமார் வழக்கு சொத்து அனுபவத்தில் இருந்து வருவதாக சொல்வதற்கான வரி ரசீதுகளை நான் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை.

3. விஜயகுமார் வரி செலுத்தியதாக சொல்லும் வரிக்கான வரிவிதிப்பு எண் தெரியுமா என்றால் வரி ரசீதை பார்த்திருக்கிறேன், ஆனால் வரிவிதிப்பு எண்

தெரியவில்லை. வழக்கு சொத்தில் ஏழை மாணவர்களுக்கு இரவு பள்ளி மற்றும் விளையாட்டு உடற்பயிற்சி நடத்தி வருவதாக சொல்வதை நிரூபிக்க ஆவணம் ஏதாவது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை, ஆனால் அது நடந்து வருகிறது. வழக்கு சொத்தில் செம்மகளிர் மன்றத்தின் சார்பாக உணவகம் நடத்தி வருவதாக முதல் விசாரணையில் சொல்லியிருப்பதை நிரூபிக்க ஆவணம் ஏதாவது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை.

4. வழக்கு சொத்திற்கு பட்டா பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டதாக என் முதல் விசாரணையில் சொல்லியிருப்பது குறித்து ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு தண்ட தீர்வை செலுத்தியிருப்பதாக என் முதல் விசாரணையில் சொல்லியிருப்பது குறித்து ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலை துறைக்கு பாத்தியமானது என்று விஜயகுமார் அவரது வழக்கில் தெரிவித்து இருப்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, அது நகராட்சிக்கு சொந்தமான சொத்தாகும்.

5. வழக்கு சொத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்காக சாலை விரிவாக்கத்திற்காக அவசியமானது என்றாலும், வாதி வழக்கு சொத்தை அபகரிக்க முயற்சிப்பதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கின் விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், நான் வாதிக்காக வேண்டி தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் மேற்படி குறுக்கு விசாரணையை தங்கள் தரப்பில் ஏற்பு செய்துகொள்வதாக தெரிவிக்கிறார்.

**அதன்படி குறுக்கு விசாரணை முடிவுற்றது.**